உள்ளவர்களும், ஆங்கில அறிவு உள்ளவர்களும் அதிகாரிகளாக பல பேர்கள் மாவட்ட ஆட்சித் துறையிலே பணிபுரிந்து வருவதால், இதை மேலும் விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் வேகமாக நிச்சயம் ஈடுபடுவார்கள் என்று நாம் நினைக்கலாம்.

நகர பஸ்கள்

* 112 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூரிலிருந்து மைலாப்பூர் செல்வதற்கு இரவு 10 மணி வரை அரசாங்க பஸ்கள் விடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழும்பூரையும் மைலாப்பூரையும் இணைக்கும் பேருந்துகள் தற்போது இரவு 10 மணிக்குப் பின்னும் ஓட்டப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தற்பொழுது பேருந்துகள் இரவு எத்தனை மணி வரையில் ஓடுகின்றன ? காலையில் எத்தனை மணிக்கு ஓட ஆரம்பிக்கின்றன ? இந்த நேரத்தை அதிகப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரவு 10 மணிக்கு மேல் ஓடும் பேருந்துகள் தியாகராய நகரிலிருந்து பாரிமுனைக்கும், பாரிமுனையிலிருந்து தியாகராய நகருக்கும் ஓடுகின்றன. இரவு 12½ மணிக்கு தியாகராய நகரிலிருந்து புறப்படுகிறது. பாரிமுனையிலிருந்து இரவு 1-10-க்கு புறப்படுகிறது. கிண்டியிலிருந்து 10-45-க்கு புறப்படுகிறது. பாரிமுனையிலிருந்து 11–10 மணிக்கு புறப்படுகிறது. தியாகராயநகரிலிருந்து இரவு 10-50-க்கு புறப்படுகிறது. பெரம்பூரிலிருந்து இரவு 11-43-க்கு புறப்படுகிறது. 38-எ என்ற எண்ணுள்ள பேருந்து பாரிமுனையிலிருந்து 1-05-க்கு புறப்படுகிறது. மூலக் கடையிலிருந்து 12-30-க்கு புறப்படுகிறது. விவேகாநந்தா இல்லத்திலிருந்து 12-59-க்கு புறப்படுகிறது. திரு. வி.க. நகரிலிருந்து 12-05-க்கு புறப்படுகிறது. பிராட்வேயிலிருந்து 10-20-க்கு புறப்படுகிறது. அம்பத்தூரிலிருந்து 11-35-க்கு புறப்படுகிறது.

* 113 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழைய மாம்பல வாசிகளின் வசதிக்காக நேரிடையாக பழைய மாம்பலத்திற்கும் டவுனுக்கும் போக வர பஸ் விட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய மாம்பல வாசிகள் தியாகராய நகருக்கு 49-ஆம் எண் பேருந்துகளில் வந்து அங்கிருந்து புறப்படும் வண்டிகளில் ஜார்ஜ் டவுனுக்கோ அல்லது நகரத்தில் மற்றப் பகுதிகளுக்கோ போகலாமாதலால் பழைய மாம்பலத்திலிருந்து நகரத்திற்கு நேரிடை வண்டி விடும் உத்தேசமில்லை. மேலும் பழைய மாம்பலத்திலுள்ள சாலைகள் மிகவும் குறுகலாயிருப்பதால் அவைகளில் அதிக வண்டிகள் செல்ல முடியாது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பழைய மாம்பலத்திலிருந்து டவுனுக்குப் போகும் பஸ் பற்றிய கேள்வி இது. ஆகவே, அது பற்றி துணைக் கேள்விகள் கேட்கவேண்டும் திரு. கொளத்தூர் கோதண்டம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சென்னை நகரில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட வழித்தடங்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த விவரம் இப்பொழுது இல்லை. மூலக் கேள்வியில் இது இடம் பெறவில்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. விநாயகம் : பழைய மாம்பலத்திலிருந்து ஜார்ஜ் டவுனுக்கு அல்லது மற்ற பகுதிகளுக்கு நேரடியாக போக பஸ் வசதி இல்லே. அதற்குக் காரணம் அங்கு லெவல் கிராஸிங் கேட் இருப்பதனுல் தான் என்று கருதுகிறேன். இப்பொழுது கோடம்பாக்கத்தில் ஓவர் பிரிட்ஜ் கட்டப் பட்டிருக்கிறதே ? ஆகவே, பஸ்களே பழைய மாம்பலத்திலிருந்து ஆரம் பித்து, வட பழனி வந்து, அங்கிருந்து மற்ற பகுதிகளுக்கு ஓவர் பிரிட்ஜ் மூலம் போவதற்கு வசதி இருக்கிறதே ? இதைப் பற்றி அரசு யோசிக்குமா? அப்படி அது நியாயமான கோரிக்கை என்ருல், அதை செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தற்பொழுது பழைய மாம்பலத் திலிருந்து தியாகராய நகருக்கு 49 என்ற எண்ணுள்ள வண்டி போய்க் கொண்டிருப்பதால், தியாகராயநகர் வந்து, பிறகு அங்கிருந்து ஜார்ஜ் டவுன் போன்ற, செல்ல வேண்டிய இடங்களுக்கு, செல்வதற்கு வசதி இருக் கிறது. உறுப்பினர் அவர்கள் கூறுகின்றது போல பஸ்கள் விடுவதற்கு, பழைய மாம்பலத்தில் துரைசாமி சாலேயில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்ட பிறகு, அது ஏதுவாக இருக்க முடியும்.

விரைவுப் பேருந்து

* 114 **வினு.—திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும், தேவகோட்டைக்குமிடையே பழனி, திண்டுக்கல் வழியாக தமிழக அரசு விரைவு வண்டி விடும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) இல்லே.

(இ) இவ்வினு எழவில்லே.

பிறபகல் 9-30. **திரு. பெ. மலேச்சாமி :** தலேவர் அவர்களே, இனிமேலாவது பேருந்து விட அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : கோவைக்கும், தேவகோட்டைக் கும் இடையே பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு இல்லே என்று மூலக் கேள்விக்கு பதில் சொன்னேன். கோவையிலிருந்து, இராமநாதபுரம் வரைக்கும் பேருந்து விட செயற்குறிப்பு இப்பொழுது அரசாங்கத்தினுடைய ஆலோசனேயில் இருக்கிறது. பரிசீலனே முடிவுற்ற பிறகு, அதைப்பற்றி யோசிக்கப்படும்.

Bulls for Cattle Farms

*115 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government entered into an agreement with Palayacottah Cattle Farm and Kangeyam Cattle Farm in Coimbatore district during the year 1966–67 for the purchase of bulls :

(*b*) if so, the cost of each bull ;

(*c*) when the bulls were taken delivery of ;

(*d*) the total cost paid ; and

(*e*) when payment was made.